www.padippakam.com




# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

# ஈழத்தவர் வரலாறு

## ஆரியர்(?) வருகை

சிங்கள வரலாற்றாசிரியர்கள், சிங்கள மக்கள் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் சிங்கள மொழி ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் நிறுவமுயன்றுள்ளனர். ஆனால் மகாவம்சத்திலோ சூளவம்சத்திலோ அவற்றையொத்த வேறு நூல்களிலோ சிங்கள மக்களை ஆரிய மக்கள் என்று குறிப்பிட்டில்லை. இந்நூல்கள் திராவிடரைத் தமிழர், பாண்டியர், கேரளர், சோழர், கன்னடர், நாயக்கர்கள் எனக் குறிப்பிட்டது போலவே சிங்கள மக்களைச் சீகளர்கள் எனக் குறிப்பிடுகின்றன. மகாவம்சம் குறிப்பிடுகின்ற விஜயனின் கதை பாண்டுகாபயன் கதை என்ற ஐதீகக்கதைகள் மூலம் ஈழத்தின் இன்றைய நாகரிக கர்த்தாக்கள் இலங்கைக்கு வந்தனரென விபரிக்கப்படுவது இலங்கையில் நிகழ்ந்த குடியேற்றங்களைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் ஆரியர்களென நிறுவமுயல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவில்லை. அதற்குரிய சான்றுகள் எங்குமில்லை. பௌத்த மதத்தின் வருகை வடஇந்தியாவிலிருந்து நிகழ்ந்ததாகையால் சிங்கள மூதாதையினரின் வருகையும் வட இந்தியப் பிரதேசங்களோடு இனங்காணப்பட்டு அவர்கள் ஆரியரென வலிந்துரைக்கப்பட்டுள்ளன. கி.மு. 483 ஆம் நிகழ்ந்த விஜயனதும் அவனது தோழர்கள் எழுநூறு பேரினதும் இலங்கை வருகைக்கு முன்னர் உண்மையான ஆரிய சேனாதிபதிகள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இராமன் என்ற ஆரியன், இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட தன் மனைவி சீதையை மீட்டுச் செல்தவதற்காக இலங்கைக்கு வந்தான். பாரதப் பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் அல்லியைக் கவர்ந்து செல்வதற்காக இலங்கையின் மேற்குக் கரையோர அரிப்புக்கு வந்தான். இயக்கப் பெண்ணான வள்ளியை மணம் முடிப்பதற்காக ஸ்கந்த என்ற ஆரியச் சேனாதிபதி, கதிர்காமம் (மாகம) வந்து சென்றான். ஆனால் இலங்கைக்கு வந்த விஜயனையும் தோழர்களையும் ஆரியர் என பாளி நூல்கள் எதுவும் குறிப்பிடவில்லை. மெண்டிசும் பரணவிதானவும் அவர் பின் வந்தவர்களும் ஆரியராக்க முயன்றுள்ளனர். விஜயனின் கதையை நிரூபிக்கக்கூடிய தொல்லியற் சான்றுகள் வட இந்தியாவிலிருந்து சிங்கள மக்களின் மூதாதையினர் இந்நாட்டிற்கு வரவில்லை என்பதையும் இந்நாட்டிற்கு நாகரிகத்தினை உருவாக்கியோர் தென்னிந்தியாவிலிருந்து ஈழம் புகுந்தனர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளன. பெருங்கற்காலப் பண்பாடு பற்றி இலங்கையிற் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சான்றுகள் இலங்கையின் நாகரிக வரலாறும் சிங்கள மக்களின் மூதாதையினரும் வடவிந்தியத் தொடர்பால் ஏற்பட்டதென்ற பாரம்பரியக் கருத்தை முற்றாக நிராகரித்துள்ளன. ஈழத்தில் ஆதிக் குடியேற்றம் நிகழ்ந்ததாகப் பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் பகுதிகளை உற்றுநோக்கும் போது பெருங்கற்கால மக்களது குடியிருப்புக்களையே பாளி நூல்கள் விஜயன் கூட்டத்தினரின் குடியிருப்புக்கள் என அழைத்துள்ளதை தெளிவாகின்றது என சிற்றம்பலம் குறிப்பிடுவது ஏற்கத்தக்கது. எனவே வடவிந்தியக் குடியேற்றத்திற்கு பதிலாக தென்னிந்தியக் குடியேற்றமே நடந்ததென்பதும், இம்மக்கள் அப்போது இங்கே காணப்பட்ட கற்கால மக்களின் கலாச்சாரத்தின் மேல் தமது கலாச்சாரத்தை திணித்தனர் எனவும் கொள்ளலாம். இங்கு காணப்பட்ட கற்கால மக்களே பாளி நூல்களில் இயக்கர்கள், நாகர்கள் என அழைக்கப்பட்ட அமானுஷ்யர்களாவர். எனவே ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகின்றது.




சிங்கள விஜயனைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்த சீகளர், இங்கு வாழ்ந்த ஆதித்திராவிடரின் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவி நிலைபெற்றதோடு அம்மக்களுடனும் கலப்பினை ஏற்படுத்திக் கொண்டனர். பெருங்கற்காலத்தில் ஈழத்திலிருந்து வளர்ந்த மொழிகளாக எலு, தமிழ் என்பன விளங்கின. இயக்க மக்கள் எலுமொழியையும் நாகர்கள் தமிழையும் பேசினர். எலுமொழி



பேசிய இயக்க மக்களுடன் தற்காலச் சிங்கள மக்களின் மூதாதையினர் கலந்து பௌத்தத்திற்கு மாற, பாளி மொழியின் தாக்கம் ஏற்பட்டுச் சிங்கள மொழி உருவாகியது என்பது அறிஞர்களின் கருத்தாகும். வடநாட்டிலிருந்து வந்த பௌத்தமதக் கலாச்சாரத்தினால் எலுமொழி பேசிய திராவிட மக்களாகிய சிங்கள மக்களின் கலாச்சாரம் தனியான பாதையில் தமிழ் - இந்து கலாச்சாரத்தை விட்டு விலகிச் சென்றது எனச் சிற்றம்பலம் கருதுகிறார்.

எனவே, பௌத்தத்தின் வருகைக்கு முன் இலங்கைத் தீவில் திராவிட ஆதிக்குடிகள் வாழ்ந்து வந்தனர். கி.மு. 483 இன் பின் அலையலையாக நிகழ்ந்த தென்னிந்தியக் குடியேற்றங்களும் சிலவிடத்து வடவிந்தியக் குடியேற்றங்களம் பௌத்தத்தின் வருகை பாளி மொழியும் புதியதொரு சிங்கள பௌத்த கலாச்சாரத்தை தென்னிலங்கையில் உருவாக்கக் காரணமாயின. அதேவேளை தமிழ் - இந்து கலாச்சாரம் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலை பெற்றது. ஆகவே, இலங்கைத் தீவு மொழிவாரியாக இரண்டு இனங்களுக்குரியதாக விளங்கி வருகின்றது.

## வரலாற்றுதய காலத்தமிழ் மன்னர்கள்


கி.மு. 483 ஆம் ஆண்டு தாமிரபர்ணியில் வந்திறங்கிய விஜயனும் அவனது தோழர்களும் தென்னிலங்கையில் வாழ்ந்த இயக்கத் திராவிடரை வெற்றி கொண்டு பல குடியேற்றங்களை நிறுவிக் கொண்டனர். தாமிரபர்ணியின் இயக்ககுலத் தலைவியாக விளங்கிய குவேனி என்பவள், அதற்குத் துணை போயினள். விஜயனும் தோழரும் இலங்கைக்கு வந்து குடியேற்றங்களை அமைத்த விதம் மகாவம்சத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

## சிங்ஹல விஜயன் வருகை

வங்கதேச இளவரசி ஒருத்தி அரண்மனையை விட்டு வெளியேறி மகதநாடு நோக்கிச் சென்ற வணிகக்குழுவுடன் பயணப்பட்டாள். காட்டு வழியில் எதிர்ப்பட்ட சிங்கம் ஒன்று வணிகர்களைக் கொன்று விட்டு அவளைக கவர்ந்து சென்று, இணைந்தது. அதனால் சிங்கபாகு, சீகசிவிலி என இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். சிங்கபாகுவுக்கு பதினாறு வயதானபோது அவன் தந்தையான சிங்கத்தைக் கொன்று தனக்குரிமையான வங்க நாட்டிற்கு மன்னனானான். தனது மனைவியாகத் தன் சகோதரியை மணந்து கொண்டான். அவர்களுக்குப் பதினாறு தடவைகளில் இரட்டையாக முப்பத்திரெண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் விஜயன் என்பவனாவான். இரண்டாமவன் சுமித்தன். விஜயன் மிக்க கொடூரமான நடத்தைகளையுடையவன். அவனும் அவனது தோழர்களும் தமது நாட்டு மக்களுக்கு மிகுந்த இன்னல்களைப் புரிந்தனர். இவனுடைய கொடிய செயல்களைக் கண்டு கோபமுற்ற நாட்டு மக்கள் அவனைக் கொன்று விடுமாறு மன்னனை வேண்டினார்கள். மன்னன் அவனைப் பலமுறை எச்சரித்தும் பயனற்றுப் போகவே விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறு பேரையும் பிடித்து, அவர்களது தலையில் அரைப்பங்கு தலைமயிரை வழித்து கலமொன்றிலேற்றி கடல் வழி அனுப்பி விட்டான். அவர்களின் கப்பல் இலங்கையின் தாமிரபர்ணிக் கரையை வந்தடைந்தது.

விஜயனின் கதை முற்று முழுதான கட்டுக்கதையாகும். விலங்கு ஒன்றுக்கும் மனித மகள் ஒருத்திக்கும் பிறந்த மன்னர் ஒருவனின் வழிவந்தவர்களாக விஜயனைக் காட்டுவதும் சிங்கள மக்களின் பரம்பரை அவ்வாறான 'சிங்கம்' ஒன்றின் வழியானது என்று கூறுவதும் உண்மையில் சிங்கள மக்களுக்குப் பெருமை சேர்ப்பதாகாது. விஜயனின் கதை சிங்கள மூதாதையினரின் வருகையைக் குறிக்கும் குறியீடாக கருதலாம். எனினும், 'இக்கட்டுக்கதையின் தோற்றத்திற்குப் பௌத்த மத ஜாதகக் கதைகளே கருப்பொருளாக அமைந்தனவென வரலாற்றறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.' தாமிரபர்ணியில் வந்திறங்கிய விஜயன், இயக்கத் தலைவியான குவேனியை மணந்து கொள்கிறான். இவர்களது திருமண விழா இயக்க மக்களது சிறிஸ்சவத்து நகரில் நிகழ்ந்தது. திருமணக் கொண்டாட்டத்திற்கென வந்திருந்த இயக்கர் அனைவரையும் குவேனியின் ஒத்தாசையுடன் விஜயனும் தோழர்களும் அழித்தொழித்தனர். குவேனி என்ற திராவிட மூதாதைப் பெண் தனது காதல் போதையால் செய்த தவறால் இயக்க மக்களில் ஒருபகுதி அழிந்தொழிய நேரிட்டது. குவேனியின் ஒத்தாசையுடன் இயக்க இன அழிப்பு நிகழ்ந்து போனது.-அதன் பின்னர் விஜயனுடைய அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திற் குடியேற்றங்களை அமைத்துடன் அக்குடியேற்றங்களுக்குத் தத்தமது பெயர்களை இட்டுக் கொண்டனர். அனுராத என்ற அமைச்சனால் மல்வத்து ஓயாவுக்கு (அருவியாறு/கதம்பநதி) அண்மையில் அமைக்கப்பட்ட குடியேற்றம் அனுராதகம எனப்பட்டது. அனுராதகமத்திற்கு வடக்கே கணதற ஓயாவிற்கு அண்மையில் உபதிஸ்ஸ என்ற அமைச்சனால் அமைக்கப்பட்ட குடியேற்றம் உறுவெலகம எனப்பட்டது. விஜித என்ற அமைச்சனால் அமைக்கப்பட்ட குடியேற்றம் விஜிதகம எனப்பட்டது. உண்மையில் இந்தக் குடியேற்றங்கள் நிறுவப்பட்ட பகுதிகள் முன்னரேயே சிறந்த குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன என்பதும் ஈழத்தின் நாகரீகத்திற்கு வித்திட்ட திராவிட மக்களது சிறப்புமிக்க வதிவிடங்கள் அவை என்பதும் தொல்லியலாய்வுகள் மூலம் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)



-செங்கை ஆழியான்-